BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# மலைக்குறவர்களின் பண்பாட்டு அடையாளமும் வாழ்வியல் மாற்றங்களும்

**நிவேதா. க.**

முனைவர்பட்டஆய்வாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்,

மின்னஞ்சல்: nivethakannan0911@gmail.com

நெறியாளர்: **முனைவர் ஆ. துளசேந்திரன்**

இணைப்பேராசிரியர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தில் இன்று வாழும் பூர்வகுடிகளில், பலர் பழங்குடிச் சமூகங்களாக வாழ்ந்து வருகின்றனர். மலைகளில் வாழும் மலைக்குறவர்கள் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களையும் பாரம்பரிய வாழ்வியல் கூறுகளையும் கொண்ட இனக்குழுக்களாக உள்ளனர். மலைக்குறவர்களின் குடியிருப்பு முறை, குடும்ப அமைப்பு, திருமண மரபுகள், வழிபாட்டு நம்பிக்கைகள், உடை மற்றும் உணவு பழக்கவழக்கங்கள், அணிகலன்கள், பாரம்பரிய தொழில்கள், ஆகியவை அவர்களின் சமூக பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. காலப்போக்கில் கல்வி வளர்ச்சி, இடப்பெயர்வு, நகரமயமாதல், புதிய தொழில் வாய்ப்புகள், அரசு நலத்திட்டங்கள் மற்றும் பிற சமூகங்களுடனான தொடர்பு போன்ற காரணங்களால் மலக்குறவர்களின் வாழ்வியல் முறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பாரம்பரிய வாழ்க்கை முறையிலிருந்து நவீன வாழ்க்கை முறைக்கு அவர்கள் நகர்ந்தாலும், அவர்களுக்கே உரிய சில பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் சமூக மரபுகள் இன்றளவும் அவர்களின் இன அடையாளத்தை தாங்கி நிற்பதை விவரிக்கும் நோக்குடன் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

மலைக்குறவர்கள், பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல் மாற்றங்கள், இனவரைவியல், பழங்குடியினர்.

## முன்னுரை

தென்னிந்தியாவில் குறிப்பாக, தமிழகத்தில் 37 பழங்குடிச் சமூகங்கள் உள்ளன. அவர்கள் தனித்துவமான வாழ்க்கை முறை, பாரம்பரிய அறிவு, இயற்கையோடு இணைந்த பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு பழங்குடிச் சமூகமும் தங்களுக்கே உரிய வாழ்விடம், தொழில், குடும்ப அமைப்பு, திருமணச் சடங்கு, வழிபாட்டு நம்பிக்கை, மொழி மற்றும் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் வாழ்வியல் முறைகளை வகுத்துள்ளனர். இவர்கள் பழங்காலந்தொட்டு மலைகளை ஒட்டிய பகுதிகளில் வாழ்ந்ததால், **மலைக்குறவர்கள்** அல்லது **மலையதியவர்கள்** என அழைக்கப்பட்டனர். கால மாறுதல்களால் இவர்கள் குறிஞ்சி நிலப் பகுதிகளை விட்டு சமவெளி பகுதிகளில் குடியேறத்தொடங்கினர். இக்கட்டுரையானது மலைக்குறவர்களின் பண்பாட்டு பாரம்பரிய வாழ்வியல் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், இன்றளவும் தொடர்ச்சியாக நிலைத்திருக்கும் பண்பாட்டுக் கூறுகளையும் ஆராய்கிறது.

## மலைக்குறவர்களின் வரலாற்றுப் பின்னணி

தென்னிந்திய பழங்குடிகளுள் தொன்மையானவர்களுள் குறவர் இனக்குழுவும் குறிப்பிடத்தக்கவர்களாவர். அவற்றுள் மலைக்குறவர்கள் என்ற இனக்குழுக்கள் தொல் பழங்குடிச் சமூகமாக அறியப்பெறுகின்றனர். இலக்கியங்களிலும் புராணங்களிலும் குறவர் சமூகத்தை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க இலக்கியமான ஐங்குறுநூறு நூலில்

**"குன்றக்குறவன் பத்து"** என்ற பத்து பாடல்கள் (251-260) குறவர் இனத்தின் வாழ்வியல் முறை குறித்துக் குறிஞ்சித் திணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. “பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் திருவிதாங்கூர் பகுதிகளில் மலைக்குறவர் இனக்குழு செல்வாக்கு மிக்க சமூகமாக இருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் மலைக்குறவன், மலக்கொறவன், கலக்குறவன், மலையடியார்கள் என பல பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.”[1] மலைக்குறவர்கள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரு பிரிவினர் காடுகளிலும் மற்றொரு பிரிவினர் சமவெளிப் பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

1981ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் மலைக்குறவர்களின் மொத்த மக்கள்தொகை 7079 ( ஆண்கள்:3615, பெண்கள்:3484 ) என மானிடவியல் அறிஞர் ஜக்கா பார்த்தசாரதி அறிக்கையில் குறிப்பிடுகிறார். மலைக்குறவர்கள் சமவெளிப் பகுதிகளில் தொடக்க காலங்களில் கேரள மாநிலத்திலுள்ள கொல்லம், “கோட்டயம் மாவட்டங்களில் வாழ்ந்து வந்தனர். மலைக்குறவர்கள் வேளாண்மை, தேன் சேகரித்தல், குறிசொல்லுதல், கூடை பின்னுதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். பிற்காலத்தில் இவர்கள் குடைக்கு பதிலாக தென்னை மற்றும் பனை ஓலைகளில் கொங்காணி செய்து தலையில் மாட்டிக்கொண்டனர். இது இவர்களின் ஒரு வாழ்வாதார தொழிலாக இருந்திருக்கின்றது என கள ஆய்வில் விருதுநகர் பகுதியைச் சேர்ந்த சுப்ரமணியன் அவர்கள் கூறினார்.“[2] இன்றளவும் மூங்கில் மற்றும் பனை மட்டைகளை பயன்படுத்தி செய்யப்படும் கூடை மற்றும் கைவினைப் பொருள்களை செய்து வருகின்றனர். மலைக்குறவ பெண்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் குறி சொல்லுதல் தொழிலில் ஈடுபடுகின்றனர்.



**கூடை முடைதல்**



குறி சொல்லுதல்

இவர்கள் “சமவெளி பகுதிகளில் வாழும் மற்ற குறவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்த இவர்கள் **“மலைக்குறவர்கள்”** எனக் கூறிக்கொள்கின்றனர்.”[3] இவர்கள் கௌரவர்களின் வழி வந்தவர்கள் என்கின்றனர். இவர்களிடையே **கூன் குறவன், காக்கா குறவன், பாண்டிக் குறவன்** என மூன்று பிரிவுகள் உள்ளதாக கொங்குக் களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிதாங்கூர் மக்கள் தொகை கணக்கெடுப்பில் 73,345 ஆக இருந்த இந்துக்களாக அறிவிக்ககப்பட்ட குறவர்களின் எண்ணிக்கை 1931ம் வருட கணக்கெடுப்பில் 87,071 ஆக உயர்ந்துள்ளது. இவர்களைத் தவிர 8,158பேர் கிறிஸ்தவர்களாகவும், 66பேர் மலங்குறவர் மதத்தின் கீழ் அறிவிக்கப்பட்டனர் என குஞ்சன் பிள்ளை 1931ம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளையில் மலைப்பகுதியில் வாழ்ந்த பழமையான வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தொடர்ந்து பின்பற்றிய இனமக்கள் தங்களது தனித்துவமான பண்பாட்டு முறைகளைப் கொண்டிருந்தனர். காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களால் மலைக்குறவர் சமூகத்தில்

வாழ்வியலில் மாற்றங்களை ஏற்படுத்தின. இதன் காரணமாக சிலர் மலைகளை விட்டு இறங்கி சமவெளி பகுதியில் வாழ தொடங்கியதோடு, பிற சமூகங்களுடனான தொடர்பின் மூலம் புதிய சமூக பண்பாட்டு மாற்றங்களையும் எதிர்கொண்டனர். 2011ஆம் ஆண்டு பழங்குடியினர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் மலைக்குறவர் மக்கள் மொத்தம் 19,613 பேர் வாழ்ந்திருக்கின்றனர்.

**மலக்குறவர்களின் பண்பாட்டு அடையாளங்கள்**

"தென்னிந்திய பழங்குடிகளில் தொன்மையானவர்களான குறும்பர்களைப் போலவே குறவர்களும் தொன்மைச் சிறப்புடையவர்களெனவும் வேடர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களெனவும் கூறப்படுகிறது."[4] மலக்குறவர்களின் மொழி, அவர்களின் சமூக அடையாளத்தின் முக்கியக் கூறாக விளங்குகிறது. இந்த இனக்குழுவானது இந்தியாவிலேயே தமிழ்நாடு மற்றும் கேரளம் பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றனர். "வரலாற்றுப் பதிவுகளின்படி, மலைக்குறவர்கள் தங்களுக்குள் மலையாள மொழியையும், பிற சமூகத்தினருடன் தொடர்பு கொள்ளும்போது தமிழ்மொழியையும் பயன்படுத்தியுள்ளனர். இவர்களின் வழக்குமொழி "**குறவன் மலையாளம்**" என அழைக்கப்படுகிறது."[5] இவ்வழக்குமொழி, மலைக்குறவர் சமூகத்தின் தனித்துவமான வரலாற்றுத் தொடர்புகளையும், அவர்களின் சமூகப் பண்பாட்டு தொடர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது. "பண்பாட்டு மாற்றம் வற்புறுத்துதல் மூலமும் நடைபெறும் வற்புறுத்துதல் மூலமும் நடைபெறும். அவர்களின் பண்பாடு ஏதேனும் ஒரு காரணத்தால் மாற்றத்திற்கு இலக்காகும்போது மக்கள் சில வழிகளில் மாறும் சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்வர். சிலர் தகவமையாமல் நிற்பர். இதனால் புதிய கூறுகளும் அவர்களின் பழைய மரபுகளுக்கும் இடையே தேக்கம் ஏற்படும். இதையே பண்பாட்டுத்தேக்கம்" என்பர் மானிடவியலாளர்.

இவர்கள் "கருத்த நிறமும் சுருள் மயிரும் உடையவர்களாக இருந்தனர். பெண்கள் காதில் நீண்ட ஓலை அணிந்திருந்தனர்."[6] மலைக்குறவ இனமக்கள் "மொத்தம் 101 பேரை வைத்து சில அளவீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மலக்குறவர் மக்களைப் பற்றிய உடலளவியல் (Anthropometric) ஆய்வில், அவர்களின் சராசரி உயரம் 155.2 செ.மீ, நாசி அளவு: 88.5 செ.மீ, , மார்புச்சுற்றளவு 73.8செ.மீ, மார்புச் சுற்றளவு சராசரியாக 73.8 செ.மீ. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் உடை முறையில் தமிழர்களை ஒத்திருந்தனர். ஆண்கள் தலைப்பாகை மற்றும் பெண்களுக்கு ஆபரணம் மற்றும் பச்சைக் குத்துதல் ஆகியவை இவர்களின் சமூக அடயாளங்களாகும். வயதான பெண்கள் இடுப்பில் ஒரு துண்டு மற்றும் வெள்ளைத் துணியையும் (முண்டு) அணிவர். பெண்கள் தங்கள் தோள் மற்றும் கைகளில் பச்சைக் குத்தும் வழக்கத்தை கட்டாயமாக பின்பற்றினர். வெள்ளி மற்றும் பித்தளையால் செய்யப்பட்ட அணிகலன்களை அணியும் வழக்கம் இருந்ததாகவும்"[7] 1981ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் மானிடவியல் அறிஞர் ஜக்கா பார்த்தசாரதி குறிப்பிட்டுள்ளார். இவர்கள் காடு மற்றும் மலைப்பகுதிகளில் கிடைக்கின்ற தேன், கிழங்கு, அரிசி, காய்கறி, பழங்கள், காட்டுப் பன்றி, தவளை போன்ற உணவுகளை உண்டனர். புகை பிடித்தல், உள்ளூரில் கிடைக்கின்ற கல்லு போன்ற சில போதை பழக்கங்களையும் பின்பற்றினர். கள ஆய்வில் கிடைத்த தகவலின் படி "மலைக்குறவர்கள் தங்கள் இனத்தவர்களை **"மக்கா"** என்று அழைக்கின்றனர். ஒரு குல சந்ததிகளை சகோதரர்களாக எண்ணுகின்றனர். எனவே அடுத்த குல சந்ததிகளை திருமணம் செய்து கொள்கின்றனர்."[8] இதன் மூலம் குடும்ப உறவுகள் மற்றும் சமூக ஒற்றுமை பாதுகாக்கப்பட்டன.

**மலைக்குறவர்களின் பாரம்பரிய வாழ்வியல்**

மலைக்குறவர்கள் மலை மற்றும் வனப்பகுதிகளுடன் தொடர்புடைய பகுதிகளில் வாழ்ந்தனர். "இவர்கள் தங்கள் பகுதிகளில் கிடைக்கின்ற மூங்கிலைக் கொண்டு குடிசை அமைத்து, சமைப்பதற்கும் தூங்குவதற்கும்

தனித்தனி குடிசை என இரு குடிசைகள் அமைத்து கொண்டனர். இவர்கள் வாழும் குடிசைகள் புலையர்கள் குடிசைகளையொத்த தாழ்வான கூரை வேயப்பட்ட கொட்டகைகளாக இருந்துள்ளது."[9]



**மலைக்குறவர்குடிசை (விருதுநகர்)**

**சடங்குகள், வழிபாடு மற்றும் சமூக மரபுகள்**

மலைக்குறவர் சமூகத்தில் வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டு நம்பிக்கைகள் மற்றும் சமூக மரபுகள் போன்றவை பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன. மலர்கள் திருவிழா, பிறப்புச்சடங்கு, பெண்கள் பூப்பெய்தல், திருமணச் சடங்கு மற்றும் இறப்பு, ஈமச்சடங்கு போன்ற வாழ்க்கை நிலை மாற்றங்களுடன் தொடர்புடைய நிகழ்வுகள் சமூகத்தின் பாரம்பரிய வழக்கங்களின்படி நடத்தப்பட்டன. விருதுநகரில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு தகவல்களின்படி, **மலர்கள் திருவிழா** கொண்டாடப்படும் வழக்கம் இவர்களிடையே இருந்துள்ளது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கின்ற குறிஞ்சி மலரை பறித்து அதனை முறத்தின் மீது நெல் மணிகள் அடங்கிய படி வைக்கப்பட்டு அதன் மீது குறிஞ்சிப் பூ நட்டு வைக்கப்பட்டு பெண்கள் அதனைச் சுற்றி கும்மி அடித்து பாடுவர். தற்போது இந்த திருவிழா கொண்டாடும் வழக்கம் குறைந்துவிட்டது என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.



**பூப்பெய்தல் சடங்கு**

மலைக்குறவர் சமூகத்தில் பெண்கள் பருவமடையும் நிகழ்வுகளில், மூன்று முதல் ஐந்து நாட்களுக்கு தனிமைப்படுத்தித் தங்கவைப்பர். தேன், தினைமாவு, கவுனி அரிசி, மலைவேம்பு இலை, கீரைவிதை போன்ற உண்வுகளை துரித உணவுகளைக் கொடுப்பர். கள ஆய்வின் போது குன்றவர். சு. சிவராமகிருஷ்ணன் என்பவர் அளித்த தகவலின்படி இவர்கள் பூப்பு அடைந்த பெண்ணுக்கு மலைவேம்பு கொடுப்பதனை ஒரு வழக்கமான பின்பற்றுகின்றனர். இது பெண்களின் கர்ப்பப்பை விரிவடைவதற்காக கொடுக்கப்படுவதாக கூறப்படுகின்றன. இதனால் மலைக்குறவர் இனப் பெண்கள் யாரும் மலட்டுத்தன்மையால் பாதிக்கப்படுவதில்லை எனவும் நம்பப்படுகிறது. திருமணமானது **"காணிமக்கா"** எனப்படும் தலைவர் முன்னிலையில் ஒரு நாளில் நடைபெறுகிறது. பெண்கள் (14-18) வயதிலும் ஆண்கள் (18-20) வயதிலும் திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர். இவர்கள் திருமணத்தில் பெண்ணிற்கு வரதட்சணை கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. திருமணத்தில் பெண்களுக்கு முண்டு கொடுப்பதும் தாலிக்கட்டுவதும் இன்றியமையதாக சடங்குகளாகும். திருமணமாகும் பெண்ணிற்கு பரிசம் போடும் வழக்கம் இருந்துள்ளது. விருதுநகர் மலைக்குறவர் இனத்தைச் சார்ந்த சு. சிவராமகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய தகவலின்படி "திருமணமான பெண்ணின் கையில் ஒரு பன்றிக்குட்டி தரப்படும் வழக்கம் குறித்து அறியப்படுகிறது."[10] பெண்கள் கருவுற்ற ஏழாவது திங்களில் "புளிகுடி சடங்கு" நடத்தப்படுகிறது. தனிக் குடிசையில் குழந்தை பெற்ற பெண்களை பதினாறு நாட்கள் தங்க வைக்கின்றனர். விவாகரத்து செய்து கொள்ளும் வழக்கமும், விவாகரத்து பெற்ற பெண் மறுமணம் செய்து கொள்ளும் முறைகளும் காணப்பெற்றன. ஒருவர் பல பெண்களை மணத்தல் செல்வத்தின் அறிகுறியாக கருதப்படுகிறது. "கூடாஒழுக்கத்தைக் கடுமையாக கண்டித்து தண்டனை விதித்து பழங்குடியை விட்டே நீக்கி விடும் வழக்கமும் இவர்களிடையே உண்டு.

மலைக்குறவர் இனமக்களிடம், அண்ணன் இறந்தபின் அண்ணன் மனைவியை தம்பி மணத்தலும், தம்பி இறந்தபின் தம்பி மனைவியை அண்ணன் மணக்கும் ஒரு தனித்துவமான வழக்கமும் இருந்துள்ளது. ”[11]

மலை, காடு மற்றும் இயற்கைச் சக்திகளுடன் தொடர்புடைய நம்பிக்கைகள், முன்னோர் வழிபாடு மற்றும் குலதெய்வ வழிபாடு போன்றவற்றை இவர்கள் பின்பற்றுகின்றனர். இறந்தவர்களை புதைக்கும் வழக்கம் இவர்களிடையே உள்ளது. புதைத்த இடத்தில் கல் நடுவதும் உண்டு. தற்போது இவர்களிடையே எரிக்கும் வழக்கமும் காணப்படுகிறது. இவர்கள் பதினாறு நாட்கள் தீட்டு மேற்கொள்கின்றனர். இவர்கள் ஆவியுலக கோட்பாடு தொடர்பான நம்பிக்கைகள் கொண்டிருந்தனர். “இம்மக்கள் முன்னோர் வழிபாட்டுடன் இந்து கடவுள்களையும் வழிபட்டனர். இவர்களிடையே பூசாரியும் மந்திரவாதியும் (இரவகாரன்) உண்டு. முன்னோர்களின் ஆவிகளையும், **மந்திரமூர்த்தி, ஆயர்வல்லி,** பொட்டநாதர் போன்ற வன தெய்வங்களையும் வழிபட்டனர். இவர்கள் மாயவித்தைகளில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள்.”[12]

**மலைக்குறவர்களின் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்கள்**

முந்தைய காலங்களில் “மலைக்குறவர்களின் வாழ்வியல் இயற்கை வளங்களுடனும், உள்ளூர் சூழலுடனும் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. காடுகளில் தலைமுறைளாக வாழ்ந்து வந்ததால் அவர்கள் காடுசார்ந்த மலை சார்ந்த பொருட்களைக் கொண்டு வாழ்வாதாரத்தைப் பெருக்கினர். ஆனால் தற்போது அரசு அவர்களை வனப்பகுதியில் அனுமதிப்பதில்லை. எனவே இதன் விளைவாக, இயற்கை சார்ந்த வாழ்வாதாரத்திலிருந்து ரப்பர் தோட்டங்களில் கூலி வேலை, வேளாண்மை சார்ந்த பணிகள் மற்றும் பிற நவீன வேலைவாய்ப்புகளை நோக்கி நகரும் நிலை உருவாகியுள்ளது.”[13] கள ஆய்வின்போது அளித்த தகவலின்படி, மலக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த பலருக்கு உரிய சாதிச் சான்றிதழ் கிடைப்பதில் சிக்கல்கள் உள்ளன. இதனால் அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த நலத்திட்டங்களைப் பெறுவதில் தடைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, மாணவர்கள் கல்வியைத் தொடரவும், இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைத் தேடவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். உரிய ஆவணங்கள் கிடைக்காதது சமூகத்தின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கும் காரணியாகக் குறிப்பிடப்படுகிறது. இத்தகவல் கள நேர்காணலின் போது மகேஷ்வரி அவர்களால் தெரிவிக்கப்பட்டது. பொள்ளாச்சி மாவட்டங்களில் அரசால் நிதி ஒதுக்கப்பட்டு கைவினை பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

மலைக்குறவர்களின் மாறிவரும் சமுதாயத்தில் மலை மற்றும் இயற்கைச் சூழலுடன் நெருங்கிய தொடர்புடைய இவர்களின் பாரம்பரிய வாழ்வியல் முறைகளில் சில மாற்றங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக, தங்களுக்குள் பயன்படுத்தப்பட்ட வழக்குமொழி, சமூகத்திற்குள்ளேயே திருமணம் செய்யும் மரபு, உறவுமுறைத் திருமணம் போன்றவை மலைக்குறவர்களின் வாழ்வியலில் மாற்றம் அடைந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் குடிசை தொழில்கள் மரபுகளான சிறு தொழில்கள், பெரும் ஆலைகள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை அறிமுகப்படுத்தும்போது அப்பகுதியின் பொருளாதார அமைப்பு ஒரு புதிய பாதைக்கு திரும்புகிறது. வாழ்வின் ஒரு பிரிவில் ஏற்படும் மாற்றம் பின்னர்த் தொடர்ச்சியாக வேறு பிரிவுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடும். மலைக்குறவர் சமூகத்தின் பண்பாட்டு மரபுகள் மற்றும் வாழ்வியல் கூறுகள் குடும்ப உறவுகளிலும், வாழ்க்கைச் சடங்குகளிலும் தொடர்ந்து நிலைத்து வருகின்றன. எனவே, மலைக்குறவர்களின் வாய்மொழி வரலாறுகள், சைகை மொழி, பாரம்பரிய அறிவு, சடங்குகள் மற்றும் சமூகப் பண்பாட்டு மரபுகளை முறையாக ஆவணப்படுத்துவது அவசியமானதாகும்.

சான்றெண் விளக்கம்

1. Madhava Menon.T, The Encyclopedia of Dravidian Tribes, Vol-II, p.204
2. சுப்பிரமணியன், வயது 72, மலைக்குறவர் இனமக்கள், விருதுநகர்.
3. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி-1, p-528
4. Edgar Thurston, castes and tribes of southern India, Vol-IV, p.154
5. Parthasarathy Jakka, "Malakkuravan," in People of India: Tamil Nadu, Vol. XL, Part III, p.882
6. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி-1, p. 528
7. Iyar L.A.K.(1937), Madhava Menon.T, The Encyclopedia of Dravidian Tribes, Vol-II, p. 206
8. ரமேஷ், வயது 35, மலைக்குறவர் இனமக்கள், கும்பகோணம், தஞ்சாவூர்.
9. Edgar Thurston , castes and tribes of southern India, 1909, Vol-IV, p.154
10. நேர்க்காணல், குன்றவர் சு. சிவராமகிருஷ்ணன், வயது 65, மலைக்குறவர் இனம், விருதுநகர்
11. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி-1, p.528
12. Iyar L.A.K.(1937), Madhava Menon.T, The Encyclopedia of Dravidian Tribes, Vol-II, p.206
13. Parthasarathy Jakka, "Malakkuravan," in People of India: Tamil Nadu, Vol. XL, Part III, p.882

துணைநூற் பட்டியல்

1. Kunjan pillai.N, Census of India 1931, volume XXVIII, Part 1 Report, superintendent Government Press, Thiruvananthapuram, Kerala.
2. Madhava Menon.T, The Encyclopedia of Dravidian Tribes, Vol-II, 1996, International school of Dravidian Linguistics, Thiruvananthapuram, Kerala.
3. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி-1,1986, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு, தஞ்சாவூர்.
4. Thurston Edgar, castes and tribes of southern India, 1909, Vol-IV, Government Press, Madras.
5. Parthasarathy Jakka, "Malakkuravan," in People of India: Tamil Nadu, Vol. XL, Part III, ed. R. Thirumalai and Manoharan .S, (New Delhi: Anthropological Survey of India, 1997}
6. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், 2011, அடையாளம் பிரஸ், திருச்சி, இந்தியா
7. Iyar L.A.K.(1937), Madhava Menon.T, The Encyclopedia of Dravidian Tribes, Vol-II, 1996, International school of Dravidian Linguistics, Thiruvananthapuram,

நேர்காணல்

8. குன்றவர். சு. சிவராமகிருஷ்ணன், வயது-65, மலைக்குறவர் இனம், விருதுநகர்
9. ரமேஷ், வயது 35, மலைக்குறவர் இனம், கும்பகோணம், தஞ்சாவூர்.
10. சுப்பிரமணியன், வயது 72, மலைக்குறவர் இனம், விருதுநகர்


*****